2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 31, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

முற்பகல் 11–15

31—

தீவன விதைகள்

***3247—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடைக்கு தீவனமாக பயன்படும் பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்ற புல் வகைகளின் விதைகளை மானிய விலையில் கால்நடை வளர்ப்போருக்கு வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குத் தீவனமாக பயன்படும் பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்ற புல்வகை விதைகளை மானிய விலையில் கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை பராமரிப்புத் துறையினரால் வழங்குவதற்கான திட்டங்கள் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் உயர்த்தி, பால் நுகர்வோருக்கு விலையை உயர்த்தாமல் ஏழையெளிய விவசாயிகளின் வயிற்றிலே பாலை வார்த்தவர் தங்கத்தாரகை எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளை அளித்தவர், இன்றைக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,014 ரூபாயை அறிவித்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா அவர்கள் அறிவித்த பால் கொள்முதல் விலை உயர்வின் காரணமாக தமிழ்நாட்டில் மாடுகள், எருமைகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. வளர்ந்து வருகின்ற மாடுகளின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதாலும், கடும் வறட்சியின் காரணமாகவும் மாட்டுத் தீவனம் கிடைப்பது அரிதாக உள்ளது. அதனால் கால்நடைகளை சரியாக பராமரிக்க முடியாமல் விவசாயிகள் அவதியுறுகிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு விவசாயிகள் மேலும்

பயனடையும் வகையில், நான் கேள்வியில் கேட்ட பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்ற புல்களின் விதைகளை கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் அளிக்க அம்மா அவர்களிடம் எடுத்துக்கூறி அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். ஆனால், கேட்காமலும், தட்டாமலும் தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்காக பல்வேறு சாதனைகளை தினந்தோறும் அள்ளிக்கொடுத்த எங்களுடைய இதய தெய்வம் தங்கத்தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வாயில்லாத ஜீவன்களுக்காக நீங்கள் கேட்டபடி பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்ற புல் வகைகளை, அந்த விதைகளை உங்களுக்கும், நேற்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.கா. மணி அவர்கள் பெண்ணாகரம் தொகுதியிலே இருக்கின்ற ஆடுகள் வளர்ப்போர் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்களே, ஆகவே, அவர்களுக்கும் வேண்டிய அளவு மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமும், எங்களுடைய கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமும், தேவையான புல் விதைகளை வளர்த்து தேவையான அளவு உங்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்கு எங்களுடைய இதய தெய்வம் தங்கத்தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறறிவு உள்ள மக்கள்மீது மட்டுமே இரக்கம் காட்டுபவர் அல்ல எங்கள் அம்மா அவர்கள். கடந்த வாரம் சாலையிலே அடிபட்டுக்கிடந்த ஆட்டுக்குட்டியின்மீது கருணை காட்டி உடனடியாக அதற்கு சிகிச்சை அளித்து (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பராமரிக்க அதன் உரிமையாளருக்கு உரிய தொகையையும் அளிக்க உத்தரவிட்டவர்தான் மனித நேயமிக்க தங்கத்தலைவி அம்மா அவர்கள். இன்று மானிய விலையில் பசும்புல், கூபாப்புல், பூனாட்சி போன்றவைகள் உற்பத்தி செய்து தருவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்று கூறியதற்கு அமைச்சர் அவர்களுக்கும், அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தத் திட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வாய்ப்பளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த வாய்ப்பினை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளிப்பார்கள், கொடுப்பார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, டாக்டர் திருமதி ரோகிணி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

32—

மயில்கள் சரணாலயம்

***33763—டாக்டர் திருமதி ஆ. ரோகிணி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை முருகன் கோயிலில் உள்ள மயில்களைப் பாதுகாக்க சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, விராலிமலை முருகன் கோயிலில் மயில்களைப் பாதுகாக்க சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 11-20

டாக்டர் திருமதி ஆ. ரோகிணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, விராலிமலை அருள்மிகு முருகன் திருக்கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலம் ஆகும். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரால் பாடப்பெற்ற சிறப்புமிக்க தொன்மையான திருத்தலம் ஆகும். விராலிமலையில் தேசிய பறவையாகவும், முருகனின் வாகனமாகவும் திகழ்கின்ற மயில்கள் நிறைந்து இருந்தன. ஆனால், தற்போது போதிய பாதுகாப்பின்மையால் மயில்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. விராலிமலையில் போதிய மழையின்மையாலும் மயில்கள் தங்குவதற்கு புதர்கள் குறைந்து விட்டதாலும், உணவைத் தேடி மயில்கள் நீண்டதூரம் செல்கின்றன.